**லங்காபுர பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூன் 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து லங்காபுர பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் மீதிகளிடையே ரூபா 6,524,600 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 422,428 தொகை பெறுமதியான ஆயுள்வேத மருந்து வகை இருப்பினை அகற்றாமல் இறுதி இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 192,779 தொகை நிதிக் கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 58,089 தொகைக்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் போது சபையினால் அமுல் நடத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக பெற வேண்டிய மற்றும் சபையினால் செலுத்தப்பட வேண்டிய முறையே ரூபா 1,822,078 தொகை மற்றும் ரூபா 200,412 இற்கான தொகையொன்று நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் படி இந்த மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் படி மீதிகள் இடையே ரூபா 1,141,834 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

(ஆ) 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்கின் படி இறுதி மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளிடையே ரூபா 301,042 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 12,585,775 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களின் படி அது ரூபா 66,729,943 தொகையாகக் காணபட்டமையால் ரூபா 54,144,168 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வாகனங்கள் பதிவேட்டின் பிரகாரம் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதி ரூபா 62,015,546 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களின் படி அவை ரூபா 63,742,034 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 1,726,488 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணிக் கடன் மீதி பதிவேட்டின் படி ரூபா 1,204,465 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களின் படி மீதி ரூபா 1,344,354 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 139,889 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 157,097,605 தொகையான சொத்துக்கள் மற்றும் ரூபா 6,124,731 தொகையான பொறுப்புக்களும் அவற்றுடன் தொடர்புடைய பதிவேடுகள், கணிப்பீட்டு சபை அறிக்கைகள் மற்றும் அட்டவணை என்பன சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134 | 2012 அக்தோபர் 31 திகதிய 1732/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தல்பொத நகரத்தை முன்னேற்றமடைந்த பகுதி ஒன்றென பிரகடனப்படுத்தி 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்த போதிலும் இது வரை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி இலக்கம் 17 | சபையினால் அடிக்கட்டைப் பதிவேடு பேணுவதற்காக PS 21 படிவத்தை பயன்படுத்தி யிருக்காததுடன் பயன்படுத்தப்பட்டிருந்த அடிக்கட்டை புத்தகங்களை திருப்பி ஒப்படைத்தல் தொடர்பாக அடிக்கட்டைப் பதிவேட்டில் பதிவுகள் ஏதும் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | நி.பி. 110 | அறிவிக்கப்பட்டவை அல்லது அறிவிக்கப்படாதவை ஆகிய நட்டங்கள் தொடர்பாக பதிவுகள் பேணுவதற்காக சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | சுற்றறிக்கைகளும் சுற்று நிருபங்களும் | |
| | (i) ஐஏ/ஐ/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 திகதிய திறைசேரி சுற்றறிக்கை | கணனி துணைக்கருவிகள் மற்றும் மென்பொருள்கள் தொடர்பாக தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) உள்ளூராட்சி ஆணையாளரின் NCP/LG/AC/4/1/2 ஆம் இலக்க 2015 திசெம்பர் 04 ஆம் திகதிய நிருபம் | சபைக்குச் சொந்தமான கப் வண்டிக்காக மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த எரிபொருள் வரையறையினை மிகைத்து ரூபா 192,470 தொகை பெறுமதியான 2026 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, 2016 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை கூடிய வருமானம் ரூபா 18,743,422 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 4,960,090 தொகையாகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2016 ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடி யானவை | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வாடகை | 1,171,200 | 637,700 | 353,559 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,220,150 | 436,210 | - |
| ஏனையவை | 11,432,831 | 17,752,655 | 15,443,125 |

### 2.2.2 ஏனைய வருமானங்கள்

வருட ஆரம்பத்தில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 94,175 தொகை மற்றும் ஆண்டின் போது சிட்டையிடப்பட்ட ரூபா 1,111,276 இற்கான தொகையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்த நீர்க் கட்டண வருமானம் ரூபா 1,205,451 தொகையில் இருந்து அறவிடப்பட்டிருந்தது ரூபா 876,115 எனப்படும் 72 சதவீதம் மட்டுமே.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்

2016 திசெம்பர் 31 திகதி அளவில் 02 நீதிமன்றங்களில் இருந்து அறவிடப்பட்டு வட மத்திய மாகாண பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 5,832,366 இற்கான நீதிமன்றத் தண்டப்பணத்தை பிரதேச சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 2,143,375 இற்கான முத்திரைக் கட்டண வருமானமொன்று பிரதேச செயலாளருக்கு அனுப்பியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த வருமானத்தில் எத்தொகையையேனும் சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த அட்டவணையின் படி 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக 02 வருடங்கள் முதல் 13 வரை காலப்பகுதியை சேர்ந்த ரூபா 2,603,325 இற்கான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக சபையினால் 2016 ஆண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) சபையினால் பயன்படுத்தப்படும் 02 வாகனங்களின் உரிமையினை உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையுடன் நேரடித் தொடர்பு ஏதும் இல்லாத செயற்திட்டங்களுக்காகவும் JCB இயந்திரத்தை இலவசமாக வழங்கியிருந்தமையால் சபை ரூபா 63,205 இற்கான வருமானமொன்றினை இழந்துள்ளது.

(இ) பீஓபீ 316 கட்டம் II கடை இலக்கம் 1, இலக்கம் 2 மற்றும் இலக்கம் 3 ஆகிய கடைகள் 2010 ஆண்டு முதல் பழுதுபார்த்தல் தேவைக்காக மூடப்பட்டிருந்ததுடன் அக் கடைகளை பழுதுபார்த்து வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இரண்டாம் நிலை 10 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலை 02 பதவிகளும் மிகையாகக் காணப்பட்டதுடன் ஆரம்ப நிலை 10 பதவிகளின் மிகை அவதானிக்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு உட்படாத ஆரம்ப நிலை மருந்து தொழிலாளர் பதவி ஒன்றிற்காக உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் போதியளவினதாக காணப்பட்ட போதிலும் சாரதி பதவி ஒன்று மற்றும் சுகாதாரத் தொழிலாளர் பதவியொன்றிற்காக அமைய அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

(அ) புலஸ்திகம விஜித வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பால் விற்பனை நிலையத்தின் செயற்பாடுகள் இடை நிறுத்தப்பட்டிருந்தமையால் அந்த பால் விற்பனை நிலையத்தில் காணப்பட்ட அதிகுளிரூட்டி 2015 மார்ச் 04 திகதி பிரதேச சபைக் களஞ்சியத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்ததுடன் 2017 மே 08 திகதி வரையும் விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டது.

(ஆ) ரூபா 124,921 தொகை பெறுமதியான 03 விடயங்கள் 03 வருட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.4 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

2014 ஆண்டின் போது நிர்மான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது நிர்மான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 5,748,307 தொகை செலவிடப்பட்டிருந்த குப்பை முகாமைத்துவ நிலையத்தை 2017 மே 08 திகதி வரை குப்பை மீள்சுழற்சி விடயங்களுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை. பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஒரு நாளைக்கு சேகரமாகும் சுமார் 02 தொன் குப்பைகளை சபையின் சுகாதார தொழிலாளர்கள் மூவரின் மூலம் சுங்காவில் பரணகமவில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான சுமார் 05 ஏக்கர் காணியில் வகைப்படுத்தப்படாமல் குவிக்கப்பட்டு இடையிடையே புதைக்கப்பட்டிருந்து. இவ்வாறு குப்பைகள் அகற்றும் இடங்கள் யானைகள் உட்பட வன உயிரினங்கள் நடமாடும் இடமாக காணப்பட்டதுடன் எதிர்காலத்தில் சுற்றாடல் சிக்கல்கள் ஏற்பட இடமிருப்பதால் குப்பை மீள்சுழற்சிக்காக முறையான செயற்திட்டமொன்று விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவையுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் நிருவாகம்
(ஆ) பதவியணியினர் நிருவாகம்
(இ) வருமான நிருவாகம்
(ஈ) உள்ளகக் கணக்காய்வு
(உ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) வாகனக் கட்டுப்பாடு